# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:65** **தேதி:-16.09.2015**

## கேரளாவில் இருந்து CSS ராவ் வெளியேற்றம்!!!

அன்பார்ந்த தோழர்களே,

கேரள மாநிலத்தில் காட்டாட்சி நடத்தி வந்த தலைமை பொது மேலாளர் CSS ராவ் அவர்களை கேரள மாநிலத்தில் இருந்து மாற்றம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி BSNL ஊழியர் சங்கம், SNEA மற்றும் BSNLCCWF ஆகிய மத்திய சங்கங்கள் 15.09.2015 அன்று மாநில தலைமையகங்களிலும், கார்ப்பரேட் அலுவலகத்தின் முன்பும் ஆர்ப்பாட்ட்ம் நடத்த அறைகூவல் விட்டன. அதனடிப்படையில் அனைத்து மாநில தலைமை பொது மேலாளர் அலுவலகம் முன்பும் கார்ப்பரேட் அலுவலகம் முன்பும் கோபாவேமான ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. நமது தமிழகத்தில் தலைமை பொது மேலாளர் அலுவலகம் முன்பும், பல்வேறு மாவட்ட தலைநகர்களிலும் மதிய உணவு இடைவேளை ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. கேரள மாநிலம் முழுவதும் ஒத்துழையாமை இயக்கம் துவங்கியது.

17.09.2015 முதல் கார்ப்பரேட் அலுவலகம் முன்பு மத்திய சங்கங்கள் சார்பாக காலவரையற்ற தொடர் உண்ணாவிரதம் மேற்கொள்ளவும், அனைத்து கிளைகளிலும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தவும் இந்த மூன்று மத்திய சங்கங்களும் அறைகூவல் விட்டிருந்தன. **ஆனால் இன்று CSS ராவ் அவர்களை கட்டாய காத்திருப்பில் வைத்தும், ஆந்திர மாநிலத்தில் ஏழுரு மூத்த பொதுமேலாளர் திரு ட.அனந்தராம் அவர்களை கேரள மாநில தலைமை பொது மேலாளராக நியமித்தும் கார்ப்பரேட் அலுவலகம் உத்தரவு பிறப்பித்து உள்ளது.**

”தோற்றதில்லை தோற்றதில்லை தொழிற்சங்கம் தோற்றதில்லை” என்ற வாக்கினை மீண்டும் நிரூபித்துள்ள கேரள மாநில தோழர்களுக்கும், ஆதரவுக் குரல் கொடுத்த அனைவருக்கும், மிகச் சரியாக தலையிட்டு பிரச்சனையை தீர்த்து வைத்த மத்திய சங்கங்களுக்கும் தமிழ் மாநில சங்கம் தனது வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநில செயலாளர்